செய்தி வெளியீட்டு எண் : 43 நாள்: 12.01.2022

**அனைவருக்கும் பயன்படும் வகையில், அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாவலராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் பெருமிதம்**

விழுப்புரம் மாவட்டம், கீழ்ப்பெரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில், நகராட்சித்துறை சார்பில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021 - 2022-ன் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவு சார் மைய கட்டிடம் கட்டும் பணியினையும், மகாராஜபுரம் பகுதியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற எரிவாயு தகன மேடை அமைக்கும் பணியினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.புகழேந்தி, ஆகியோர் முன்னிலையில் இன்று (12.01.2022) அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் உள்ள மாநகராட்சி, நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் கட்டமைப்பினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். நகர்ப்புற பகுதியில் பாதாள சாக்கடை திட்டம், மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு, நூலகம், அறிவுசார் மையங்களும், ஊரகப்பகுதிகளில் தரமான சாலை வசதி, வீடுகள் தோறும் குடிநீர் இணைப்பு வசதியுடன் கூடிய சுகாதாரமான குடிநீர் வசதி, கழிவுநீர் வாய்க்கால் வசதி, அனைத்து குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு, கழிவறை வசதி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, விழுப்புரம் நகராட்சித்துறை சார்பில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021 - 2022-ன் கீழ் கீழ்ப்பெரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்படவுள்ளது. இக்கட்டிடத்தில், பொது வாசிப்பு பகுதி, இளையோர் ஆயத்த பகுதி, பெண்கள் வாசிப்பு மற்றும் ஆயத்த பகுதி, பயிற்சி மையம், பாதுகாப்பு வைப்பறை, குழந்தைகள் உள்புறம் மற்றும் வெளிப்புறத்தில் கற்றல் பகுதி அமைக்கப்படவுள்ளது. மேலும், வரவேற்பு பகுதி, பார்வையாளர் அமரும் பகுதி, CCTV கேமரா கட்டுப்பாட்டு அறை, WIFI வசதி, Smart Class வசதி போன்றை இடம்பெறவுள்ளது.

மேலும், மகாராஜபுரம் பகுதியில், ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படவுள்ளது. இவ்எரிவாவு தகன மேடை தொழில்நுட்ப வசதிகளுடனும், வாகனம் நிறுத்தும் இடம், கழிவறை பகுதி, அமரர் ஊர்தி நிறுத்தும் இடம், பேவர் பிளாக் சாலை, 62.50

KVA மின் ஆக்கி வசதி, திரவ பெட்ரோலிய வாயு சிற்றுலையுடன் கூடிய வாயு உருளை, புகைப்போக்கி வசதிகள் போன்றவை அமையப் பெற உள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க, விழுப்புரம் மாவட்டத்தில் பருமழை மற்றும் இயற்கை பேரிடர்களால் உயிரிழந்தவர்களின் 3 குடும்ப வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.4. இலட்சம் வீதம் நிவாரண உதவியும், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட டி.புதுப்பாளையம் ஊராட்சி செயலாளர் அவர்கள் பணியின் போது உயிரிழந்ததையடுத்து, ஊரக வளர்ச்சித்துறை சார்பில் உயிரிழந்தவரின் குடும்ப வாரிசுதாரருக்கு பணிநியமன ஆணை இன்று வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திடும் திட்டங்கள் அனைத்தும் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் அமைகிறது. எதிர்பாரதவிதமாக ஏற்படும் இயற்கை பேரிடர் காலத்தில் பாதிக்கப்படுவர்களையும் காத்திடும் வகையில் நிவாரண உதவிகள் மற்றும் பணிநியமன ஆணைகள் உள்ளிட்டவற்றை வழங்கியும், அனைவருக்கும் பயன்படும் வகையில், அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாவலராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.கி.அரிதாஸ், நகராட்சி ஆணையர் திரு.போ.வி.சுரேந்திரஷா, நகராட்சி பொறியாளர் திரு.பி.ஜோதிமணி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்